සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
**Department of Samurdhi Development**
ග්‍රාමීය සංවර්ධන , සමාජ ආරක්ෂණ සහ ප්‍රජා සවිබල ගැන්වීමේ අමාත්‍යාංශය
கிராமிய அபிவிருத்தி , சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
Ministry of Rural Development, Social Security and Community Empowerment

| මගේ අංකය<br>**எனது இல**<br>**My No** | DSD/HO/07/SD/07/2025-சுற்றறிக்கை | ඔබේ අංකය<br>**உமது இல**<br>**Your No** | ............................................ | දිනය<br>**திகதி**<br>**Date** | 2025.05............................. |
|---|---|---|---|---|---|

***சமுர்த்தி சுற்றறிக்கை:- சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினம்***

சகல மாவட்ட செயலாளர் / மாவட்ட சமுர்த்தி மேலதிகப் பணிப்பாளர் தலைமையதிபதிகள்,
சகல மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்,
சகல மாவட்ட பிரதி மற்றும் உதவிப் பணிப்பாளர்கள்,
சகல மாவட்ட சமூக அபிவிருத்தி / சமுதாய அடிப்படை முகாமையாளர்கள்,
சகல சமுர்த்தி முகாமையாளர்கள்,
சகல சமூக அபிவிருத்தி உதவியாளர்கள்,
சகல சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,
சகல சமுதாய அடிப்படை விடயப் பொறுப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள்,
சகல சமுர்த்தி பிரதேச அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள்,
சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் தலைவர்கள் மற்றும் செயலாளர்கள் ஆகியோருக்கு.

**"வலுவூட்டலாள் நாட்டை வெல்லுங்கள் – போதையிலிருந்து மீண்டெழுங்கள்"**
**சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினம் - 2025 மே 31- ஜூன் 17**

**"நண்பா போதைக்கும் புகைத்தலுக்கும் முற்றுப்புள்ளி வைப்போம் - வலுவான தேசம் ஒன்றினை நிதமும் கட்டியமெழுப்புவோம்"** எந்த தலைப்பின் கீழ் கடந்த ஆண்டில் கொடி அணிவிக்கச் செய்யும் வேலைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்டு போதைப் பொருளிலிருந்து மக்களை மீட்டெடுத்துக் கொள்ளும் பொருட்டு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக தாங்கள் வழங்கிய ஒத்துழைப்பிற்கு முதலில் மாவட்ட செயலாளர்கள், மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர்கள் மற்றும் அப்பணியாளர் குழாம், பிரதேச செயலாளர்கள் மற்றும் சகல சமுர்த்தி முகாமையாளர்கள், சமூக அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்கள் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் உட்பட மக்களுக்கும் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## 01. அறிமுகம்

2013 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் பிரகாரம் “பொருளாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை மேம்படுத்துவதில் வறுமை நிலையினை ஒழித்தல் மற்றும் சமூக சமத்துவத்தை உறுதிப்படுத்தும் தேசிய கொள்கையினை உறுதிப்படுத்துவதில் தனிநபர், குடும்பம், குழுக்கள் மற்றும் மக்களை மையமாகக் கொண்ட வாழ்வாதார அபிவிருத்திச் செயற்பாடுகளை மேம்படுத்துவது சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தினை ஆரம்பிப்பதன் முக்கிய குறிக்கோளாகும். மேற் சொன்ன சட்டத்தின்

**1වන අදියර,4 වන මහල , සෙත්සිරිපාය , බත්තරමුල්ල. / 1ம் கட்டம், 4 வது மாடி,செத்சிறிபாய பத்தரமுல்ல / 1st Step, 4 th floor, Sethsiripaya Battaramulla**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | අධ්‍යක්ෂ ජනරාල්<br>பணிப்பாளர் தலைமையதிபதி<br>Director General | අතිරේක අධ්‍යක්ෂ ජනරාල් (පාලන හා ආයතන)<br>மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதி ( நிர்வாகம்/தாபனம்)<br>Additional Director General (Admin & Establishment) | ප්‍රධාන ගණකාධිකාරී<br>பிரதான கணக்காளர்<br>Chief Accountant | අධ්‍යක්ෂ (ක්ෂුද්‍ර මූල්‍ය)<br>பணிப்பாளர் (குறு நிதி )<br>Director (Micro Finance) | කාර්යාලය<br>அலுவலகம்<br>Office |
| Tel- | 011-2872202 | 011-2873799 | 011-2869742 | 011-2889003 | 0112872202 |
| Fax - | 011-2889002 | 011-2873996 | 011-2869742 | 011-2887469 | |
| E-mail- | dgsamurdhi@gmail.com | diradmin@samurdhi.gov.lk | finance@samurdhi.gov.lk | | |
| | | **Hot Line :0112-889007** | | **Hot Line:0112-885582** | **Hot Line: 011- 2887722** |

பிரகாரம் வறுமை நிலையினை ஒழித்தல் மற்றும் சமூக சமத்துவத்தை உறுதிப்படுத்துகின்ற சமூகம் ஒன்றினைக் கட்டியெழுப்பும் பொருட்டு தேவைப்படக்கூடிய அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளும்

போது அதற்குரிய முக்கியமான சவாலாக உள்ள போதைப்பொருள் மற்றும் புகைத்தல் பாவனையில் இருந்து மக்களை விடுவித்துக்கொள்வதற்காக சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தோடு இணைந்ததாக சமுர்த்தி கொடி வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.

2025 ஆம் ஆண்டின் குடும்பங்களை வலுவூட்டும் வேலை திட்டத்தின் கீழ் சமூக, உள, சுகாதார சுற்றாடல் மற்றும் உளவளத்துணையின் ஊடாக குடும்பங்களை வலுவூட்டச் செய்வது சமூக அபிவிருத்தி பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதனால் புகைத்தல் மற்றும் போதையிலிருந்து மக்களை மீட்டெடுத்து அக்குடும்பங்களை வலுவூட்டுவதற்கு இவ்வாண்டின் சமூக அபிவிருத்திப் பிரிவின் மூலம் வேலைத் திட்டத்தினை நடைமுறைப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

2013 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க சமுர்த்தி சட்டத்தின் ii பிரிவின் 09வது பந்திக்கமைய சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் iii பிரிவின் 15வது பந்திக்கமைய பிரதேச அமைப்புகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் அந்த அமைப்புகளின் சகல மக்கள் தலைவர்களும் பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி உத்தியோகத்தர்கள்,சமூக அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்களினதும் முகாமையாளர்களினதும் தலையீட்டுடன் பிரதேச செயலாளர்களின கண்காணிப்பின் கீழ் இந்த வேலை திட்டத்தினை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளது.

## 02. செயற்படுத்தப்படும் விதம்

i. மாவட்ட செயலகங்களால் சமுதாய அடிப்படை அமைப்பு மட்டத்தில் பெற்றுக் கொண்ட தேவைப்பாடுகளுக்கு அமைய தயாரிக்கப்பட்ட பிரதேச செயலகப் பிரிவு அறிக்கையின் பிரகாரம் அச்சிடப்பட்ட கொடி, ஸ்டிக்கர், உண்டியல், லேபல்கள் மற்றும் சுவரொட்டிகளை 2025.மே.20ஆம் திகதியளவில் சகல மாவட்ட செயலகங்களுக்கும் முறைப்படி கிடைக்க ஆவண செய்யப்படும். தேசிய சமூக அபிவிருத்தி நிதியத்தின் கட்டுப்பாட்டுச் சபைக் கூட்டத்தில் மேற்கொண்ட தீர்மானத்தின் பிரகாரம் இம்முறை 2000 மட்டளவிலான சுவரொட்டிகளை அச்சிட தீர்மானித்துள்ளது. அதற்கமைய மாவட்ட செயலகங்களில் உள்ள சமுதாய அடிப்படை மற்றும் சமூக அபிவிருத்தி விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களால் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் ஒதுக்கப்பட்ட கொடி, ஸ்டிக்கர், உண்டியல்களின் லேபல்கள் மற்றும் சுவரொட்டிகளை ஒவ்வொரு சமுர்த்தி சங்க முகாமையாளர்கள் அல்லது சமூக அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்களுக்கு 2025 மே 23ம் திகதிக்கு முன்னர் முறைப்படி ஒப்படைத்தல் வேண்டும்.

மாவட்டச் செயலகங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ள சுவரொட்டிகள்

- மாவட்டச் செயலகத்திற்கு - 04
- பிரதேச செயலகத்திற்கு - 01
- சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்திற்கு - 01

- சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிக்கு - 01 என் பிரகாரமாகும்

ii. சகல சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமூக அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்கள், சமுதாய அடிப்படை அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் தேவையான பிரகாரம் கொடி, ஸ்ரிக்கர் லேபல்கள் மற்றும் சுவரொட்டிகளை சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்கள் வலய உதவியாளர்கள் மூலம் 2024 மே 30ம் திகதிக்கு முன்னர் சகல பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் மக்கள் தலைவர்களுக்கு முறைப்படி ஒப்படைத்தல் வேண்டும்.

iii. சகல பிரிவுப்பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களாலும் வழங்கப்பட்டுள்ள உண்டியல்களின் லேபல்களை ஒட்டி சீலிடப்பட்ட பாதுகாப்பான உண்டியலொன்றினைத் தயாரித்துக் கொண்டு தனது பிரிவுக்குரிய சமுதாய அடிப்படை அமைப்புகளின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் உட்பட நிறைவேற்றுக் குழு அங்கத்தவர்களுடன் கூட்டிணைந்து அந்த பயனாளிகளின் ஊடாக கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்கச் செய்தல், புகைத்தல் மற்றும் போதைப்பொருள் பாவனையிலிருந்து தவிர்க்கச் செய்யும் செய்தியை மக்களுக்கு வழங்கி நிதியத்தினை அறவிடுவதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

iv. கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்குவதன் மூலமாக நிதியத்தினை அறவிடுவது 2025 மே 31 மு.ப. 08.00 மணியிலிருந்து 2025 ஜுன் 17 பி.ப.10.00 மணி வரை மாத்திரம் மேற்கொள்ளல் வேண்டும். ஜுன் 14ம் திகதி பி.ப.10.00 மணியின் பின்னர் கொடியினை அணிவிக்கச் செய்வதன் ஊடாக நிதியத்தினை சேகரிப்பது கட்டாயமாக நிறுத்தப்படல் வேண்டும் என்பதுடன் போதை தடுப்பு நடவடிக்கைகளை செயற்படுத்த முடியும்.

v. கொடி மறறும் ஸ்ரிக்கர்களை வழங்கும் போது எக்காரணத்தினடிப்படையிலும் பயனாளிகள் மற்றும் மக்களிடமிருந்து பலவந்தமாக நிதி சேகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாகாது.

vi. கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்கும் போது”சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தினை” மக்களிடத்தேயே நினைவூட்டி பயனாளிகளைப் போன்று பொதுமக்களையும் புகைத்தல் மற்றும் போதைப் பொருள் பாவனையிலிருந்து மீட்டெடுக்கும் பிரதான குறிக்கோளுக்காக பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல் வேண்டும்.

vii. கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை மக்களுக்கு வழங்குவதனால் சேகரிக்கின்ற தொகையினை பிரதேசத்தின் சமுதாய அடிப்படை அங்கத்தவர்களினதும் அவர்களது குடும்பங்களினது சிறுவர்களுக்கும் சமூக நலன்புரி நடவடிக்கைகளின் பொருட்டு செலவிடுவதனை மக்களுக்கு விளக்கமளிக்கவும் நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். சமுதாய அடிப்படை அமைப்பு அங்கத்துவம் கிடைக்கப் பெறாத எந்தவொரு நபருக்கும் இந்த நன்மைகள் பெற்றுக் கொள்ள முடியாது என்பதனை சுட்டிக் காட்டுகின்றேன்.

viii. கொடி மற்றும் ஸ்டிரிக்கர்களை வழங்குவதன் மூலம் சேகரித்த தொகையினை சீலிடப்பட்ட உண்டியலில் மாத்திரம் இடவேண்டியதுடன் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தில் பணியாற்றும் எந்த ஒரு உத்தியோகத்தரும் பணத்தினை சேகரித்தலாகாது. சமுதாய அடிப்படை அமைப்புக்களின் அங்கத்தவர்கள் கூட முறையற்ற விதத்தில் பணம் சேகரித்தல் அல்லது

பட்டியல் ஒன்றில் குறிப்பிட்டு பணத்தை சேகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ளலாகாது. ஏதேனும் ஒரு நன்கொடையை வழங்கக்கூடிய பிரபல நபர் ஒருவர் அல்லது தனவந்தர் ஒருவர் கூடுதலான பெறுமதியினையுடைய நிதித் தொகையினை வழங்குவதாயின் அதனை குறித்த சமுதாய அடிப்படை அமைப்பின் வங்கிக் கணக்கின் வரவின் பொருட்டு வரையப்பட்ட காசோலை ஒன்றின் மூலம் அல்லது களத்தில் பணத்தினை பொறுப்பேற்கும் பற்றுத்தாளை (பற்றுச்சீட்டு) பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மூலம் வழங்கப்படுவதனூடாக மாத்திரம் அந்த நிதியை பொறுப்பேற்றுக் கொள்ளல் வேண்டும்.

ix. மேலும் கொடிவேலைத் திட்டத்தினை வெற்றிகரமாக்கிக் கொள்வதற்கு கிராமிய மற்றும் பிரதேச மட்டத்தில் விசேட வேலைத் திட்டங்களை ஒழுங்கு செய்து கொள்ள முடியும்.

## 03. சேகரித்த தொகையினை வைப்பு செய்வதும் அறிக்கையிடுவதும்

i. கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்கியதன் மூலம் நிதி சேகரிப்பது 2025 ஜுன்மாதம் 17ஆம் தேதி மு.ப.10.00 மணிக்கு முன்னர் பூர்த்தி செய்யப்படல் வேண்டும். அன்றைய தினம் மு.ப.10.00 மணியிலிருந்து பி.ப.01.00மணி வரை நிதியிடப்பட்டு சீலிடப்பட்ட உண்டியல்களை சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் அல்லது செயலாளர் மற்றும் பொருளாளரால் பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தரிடம் குறித்த சமுதாய அடிப்படை வங்கி வளவுக்குள் ஒப்படைத்தல் வேண்டும்.

ii. பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோத்தரால் சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் அல்லது செயலாளர் மற்றும் பொருளாளரால் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர் முன்னாலேயே பணமிடப்பட்டு சீலிடப்பட்டுள்ள உண்டியலை திறத்தல் வேண்டும்.

iii. மேலே இலக்கம் 03 ii இல் குறிப்பிடப்பட்டுள்ள சகலரினதும் மத்தியில் கணக்கிடப்பட்ட தொகையினை உறிய பிரகாரம் பட்டியல் ஒன்றில் குறிப்பிட்டு அதற்கு பிரிவு பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்பின் பொருளாளரால் கையொப்பமிடப்படல் வேண்டும்.

iv. சேகரித்த தொகையினை சமுதாய அடிப்படை அமைப்பின் பொருளாளரால் தனது சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் பெயரில் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அங்கத்தவரல்லாதோர் சேமிப்புக் கணக்கில் வரவிடப்படல் வேண்டும்.

v. சகல சமுதாய அடிப்படை அமைப்புகளிலிருந்தும் பணமிடப்பட்டு சீலிடப்பட்ட உண்டியல்கள் சகலவற்றினையும் திறந்து பணத்தினை வைப்புச் செய்ததன் பின்னர் மேலே 03 iii இன் பிரகாரம் தயாரிக்கப்பட்ட பட்டியலை வலய உதவியாளர்கள் மற்றும் குறித்த பிரிவின் சமுர்த்தி முகாமையாளரால்

கையொப்பமிடப்படல் வேண்டும். இங்கு இதன் மூலப்பிரதியினை வங்கிச் சங்கத்தின் முகாமையாளருக்கு அனுப்ப வேண்டியதுடன் நிழற்பிரதியினை வங்கியில் ஆவணப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

vi. சகல சமுதாய அடிப்படை அமைப்புக்களிலிருந்தும் வைப்புச் செய்த கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்கியதன் மூலம் சேகரித்த தொகையினை மாத்திரம் ஒவ்வொரு சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர் மற்றும் பொருளாளரினது எழுத்து மூல கோரிக்கையின் பிரகாரம் பிரதேச அமைப்பின் பெயரில் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிச் சங்கத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள அங்கத்தவரல்லாதோர் சேமிப்புக் கணக்கில் வரவின் பொருட்டு வரையப்பட்ட காசோலை மூலம் 2025 ஜுன் 25ஆம் திகதி பிற்பகல் 3.00 மணிக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

vii. வங்கிச் சங்க முகாமையாளர்களின் கண்காணிப்பின் கீழ் சமூக அபிவிருத்தி உதவியாளர்கள், சமுதாய அடிப்படை அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் சமுர்த்தி வங்கி முகாமையாளர்களிடமிருந்து கிடைக்கடப் பெற்ற ஒவ்வொரு சமுதாய அடிப்படை அமைப்பிலிருந்தும் சேகரித்த தொகைகளும் உள்ளடங்கிய பட்டியலின் கூட்டுத்தொகையும் வங்கிச் சங்கங்களின் முகாமையாளர்களால் தயாரிக்கப்பட்ட வைப்புக்களின் சேகரிப்புக்களின் உறுதிப்பாட்டு கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதியுடன் சமனாக உள்ளதா என்பதனைப் பரீட்சித்து பிரதேச அமைப்பின் தலைவர்/செயலாளரின் கையொப்பத்துடனான கடிதம் ஒன்றினை வலய மட்டத்தில் சேகரிக்கப்பட்ட தொகை தொடர்பான பட்டியல் ஒன்றினை 2025 ஜுலை 15ம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலாளர்/மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளருக்கு அனுப்புதல் வேண்டும்.

viii. மாவட்டத்தின் சமூக அபிவிருத்தி,சமுதாய அடிப்படை விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களால் பிரதேச அமைப்புக்களிலிருந்து கிடைத்த கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்கியதன் மூலம் சேகரித்த தொகை உள்ளடங்கிய பட்டியலைப் பரீட்சித்து சரியென உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் மாவட்டப் பட்டியலைத் தயாரித்து மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரின் கையொப்பத்துடன் தழுவல் கடிதம் ஒன்றோடு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் சமூக அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளருக்கு 2025 ஜுலை 22ம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும். அதற்காக கீழுள்ள இணைப்பினை பயன்படுத்துதல் வேண்டும்.

| தொ.இலக்கம் | பி.செ.பிரிவு | சமுதாய அடிப்படை அமைப்புக்களின் எண்ணிக்கை | சேகரித்த தொகை |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | மொத்தம் | | |

## 04. வைபவங்கள் மற்றும் விசேட வேலைத் திட்டங்கள்.

i. சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்தினை நாட்டின் அனைத்து பிரஜைகளுக்கும் விளக்கமொன்று ஏற்படக் கூடிய விதத்தில் நினைவூட்டுவதும் அதன் பொருட்டு விசேட வேலை திட்டங்கள் மற்றும் வைபவங்களை ஒழுங்கு செய்தல் வேண்டும்.

ii. சகல கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கும் பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் 2025 மே 31ஆம் தேதி மு.ப.11.00 மணிக்கு முன்னர் புகைத்தல் மற்றும் போதையிலிருந்து மக்களை மீட்டெடுக்கும் வேலை திட்டம் மற்றும் கொடி அணிவிக்க செய்யும் விசேட வேலைத்திட்ட வைபவத்தினை தனது அலுவலக வளவில் ஒழுங்கு செய்து கொள்ள வேண்டியதுடன் அங்கு கிராம

உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் உள்ள சமயத் தலைவர்கள், தனவந்தர்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் பொது மக்களையும் தொடர்புபடுத்திக் கொள்ளல் வேண்டும்.

iii. ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கியும் உள்ளடங்குகின்ற பிரகாரம் முகாமையாளர்களால் தனது வங்கி வளவில் 2025 மே 31 ஆம் திகதி மு.ப 11:30 மணிக்கு கொடி அணிவிக்கச் செய்யும் விசேட வைபவத்தினையும் புகைத்தல் மற்றும் போதைப் பாவனையிலிருந்து மக்களை மீட்டுக் கொள்ளும் வேலைத் திட்டங்களை (விஞ்ஞானபூர்வமான முறைகளைப் பின்பற்றி) ஒழுங்கு செய்து கொள்ளல் வேண்டும். அங்கு சமயத் தலைவர்கள், தனவந்தர்கள், அரச உத்தியோகத்தர்கள், மக்கள் தலைவர்கள் மற்றும் வாடிக்கையாளர்களை தொடர்புபடுத்திக் கொள்ளல் வேண்டும்.

iv. சகல பிரதேச செயலகப் பிரிவுகளும் உள்ளடங்குகின்ற பிரகாரம் பிரதேச செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் வங்கிச் சங்க முகாமையாளர்கள், தலைமைப்பீட சமுர்த்தி முகாமையாளர்கள், சமுர்த்தி வங்கி முகாமையாளர்கள், சமுதாய அடிப்படை விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் சமூக அபிவிருத்தி உதவியாளர்களால் 2025 மே 31ம் திகதி மு.ப. 11:30 மணிக்கு கொடியினை அணிவிக்கச் செய்யும் விசேட வைபவமும் புகைத்தல் மற்றும் போதையிலிருந்து மக்களை மீட்டிக் கொள்ளும் வேலைத் திட்டத்தினையும் பிரதேச செயலக வளவில் ஒழுங்கு செய்து கொள்ளல் வேண்டும். அங்கு சமயத் தலைவர்கள். தனவந்தர்கள், அரசாங்க உத்தியோகத்தர்கள பொதுமக்கள் மற்றும் இளைஞர் யுசவதிகளையும் முடியுமானளவு சந்தர்ப்பங்களில் உரிய அங்கீகாரத்துடன் பாடசாலை மாகாணங்களையும் கலந்து கொள்ளச் செய்தல் வேண்டும்.

v. சகல மாவட்டச் செயலக வளவிலும் மாவட்டச் செயலாளரின் அங்கீகாரத்தின் அடிப்படையில் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளரின் கண்காணிப்புடன் சமூக அபிவிருத்தி மற்றும் சமுதாய அடிப்படை விடயப் பொறுப்பு உத்தியோகத்தர்களால் விசேட வைபவம் ஒன்றினை 2025 மே மாதம் 31ம் திகதி மு.ப.11.30 மணிக்கு ஒழுங்கு செய்தல் வேண்டும். அங்கு சமயத் தலைவர்கள், தனவந்தர்கள், அரச உத்தியோகத்தர்கள் பொது மக்கள் மற்றும் இளைஞர் யுவதிகளையும் கலந்து கொள்ளச் செய்தல் வேண்டும்.

vi. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் கிராம உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி மட்டத்தில், பிரதேச செயலகப் பிரிவு மற்றும் மாவட்ட செயலக மட்டத்தில் நடாத்தப்பட்ட விசேட வைபவங்களில் புகைத்தல் மட்டும் போதைப்பொருள் பாவனை சார்ந்ததும் அதனைத் தவிர்ந்திருப்பதால் கிடைக்கும் நிதி மற்றும் நிதி அல்லாத நன்மைகள் தொடர்பில் விளக்கமொன்று மேற்கொள்ளப்படுகின்ற பிரகாரம் விரிவுரை ஒன்றினை மேற்கொள்வதற்கும் திட்டமிடல் வேண்டும்.

vii. மேலே குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் உரிய வைபவத்தின் இறுதியில் ஒவ்வொரு அலுவலக வளவில் அமைந்துள்ள சமுதாய அடிப்படை அமைப்பு அதிகார பிரதேசத்தின் அங்கத்தவர்கள் பலரையோ அல்லது சிறுவர் கழக சிறார்களையோ வரவழைத்து அவர்கள் மூலம் கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்கச் செய்ததன் பின்னர் நிதியினை சேகரிப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

viii. இந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது அரசாங்க உத்தியோத்தர்களுக்கு மேலதிகமாக சமுதாய அடிப்படை அமைப்புத் தலைவர்களையும் சகல சந்தர்ப்பங்களிலும் கலந்து கொள்ளச் செய்தல் வேண்டும்.

ix. 2025 மே 31ம் திகதியின் சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினத்தின் நினைவாக வைபவங்களை நடாத்துகின்ற சந்தர்ப்பங்களில் அல்லது அதன் பின்னர் உள்ள சந்தர்ப்பங்களில் வீதி நாடகங்கள், சித்திரக் கண்காட்சிகள், சுவரொட்டிக் கண்காட்சிகள், பேரணிகள், விழிப்பூட்டல்கள் (விஞ்ஞான முறைகளின் பிரகாரம்) போன்ற விசேட வேலைத் திட்டங்களை ஒழுங்கு செய்துகொள்ள சந்தர்ப்பங்கள் உள்ளன.

x. சகல பிரதேச செயலகப் பிரிவு மற்றும் சகல சமுர்த்தி வங்கிகளுக்கு கிட்டிய இடங்களில் 2025 ஆம் ஆண்டின் புகைத்தல் எதிர்ப்புக் கொடி தின தலைப்பினை காட்சிப்படுத்தப்படுகின்ற பிரகாரம் புகைத்தல் மற்றும் போதைப் பொருள் பாவனையின் விளைவுகளை சுட்டிக்காட்டுகின்ற விதத்தில் படைப்பாக்க ரீதியாக தயாரிக்கப்பட்ட பதாதை ஒன்றினைக் காட்சிப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்வது பொருத்தமானதாகும். இதன் பொருட்டு சமுதாய அடிப்படை வங்கி, சமுதாய அடிப்படை அமைப்பு நிதியத்தினை பயன்படுத்த முடியும். (அந்த அமைப்புக்களின் அங்கீகாரத்துடன்) இக் கொடியினை அணிவிக்கச் செய்யும் வைபவம் மற்றும் விசேட வேலைத்திட்டங்களின் பொருட்டு ஏதேனும் ஒரு தொகையினை செலவிட வேண்டியேற்படின் மாத்திரம். கடந்தாண்டில் சேகரித்த தொகையிலிருந்து உச்சபட்டசமானது ரூபா 10000/- உட்பட்டதாக குறித்த அமைப்புக்களின் அங்கீகாரம் மற்றும் நிதிப் பிரமாணத்திற்கு உட்படடதாக மேற்கொள்ள முடியும்.

## 05. மதிப்பீட்டு முறை.

i. மக்களுக்கு கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்கச் செய்வதன் மூலம் சேகரித்த கூடுதலான தொகையளவினைக் கவனத்திற் கொண்டு மதிப்பீட்டு முறையொன்றினை கிராம உத்தியோகத்தர் பிரிவு, சமுர்த்தி வங்கி, சமுர்த்தி வங்கிச் சங்கம், சமுதாய அடிப்படை அமைப்பு, பிரதேச அமைப்பு மற்றும் மாவட்டச் செயலக மட்டத்தில் தயாரிக்கப்பட உள்ளது.

ii. சகல சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்களாலும் சகல வங்கி வலயத்திற்குள் அமைந்துள்ள சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளிலிருந்து கூடுதலான நிதியளவினை சேகரித்த சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் தொகையினை குறிப்பிட்டு வங்கிச் சங்க முகாமையாளருக்கு 2025 ஜூலை 31ஆம் திகதிக்கு முன்னர் எழுத்து மூலம் அறிவித்தல் வேண்டும்.

iii. சகல சமுர்த்தி வங்கி முகாமையாளர்களாலும் தனது பிரதேச செயலகப் பிரிவிற்குச் சொந்தமான சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி சமுதாய அடிப்படை வங்கி அதிகார பிரதேசத்தில் (வலயத்திற்குள்) கூடுதலான தொகையினை சேகரித்த சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் தொகையினை குறிப்பிட்டு ஒவ்வொரு சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கிக்கும் வைப்பின் பொருட்டு கிடைத்த மொத்த தொகையினையும் குறிப்பிட்டு பட்டியல் ஒன்றினைத் தயாரித்து பிரதேச செயலாளரின் சிபார்சுடன் மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளருக்கு 2025 ஆகஸ்ட் 06ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புதல் வேண்டும்.

iv. மாவட்டச் செயலகத்தின் சமூக அபிவிருத்தி விடயப் பொறுப்பு உத்தியோகத்தர் மற்றும் சமுதாய அடிப்படை விடயப் பொறுப்பு உத்தியோகத்தர் மூலம் தனது மாவட்டத்திற்குள் கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்கியதன் மூலம் கூடுதலான தொகையளவினை சேகரித்த சமுதாய அடிப்படை அமைப்பு(வங்கி வலய மட்டத்தில்) சமுர்த்தி சமுதாய அடிப்படை வங்கி, பிரதேச செயலகப் பிரிவு உரிய தொகையினையும் குறிப்பிட்டு பட்டியல் ஒன்றைத் தயாரித்து மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளரின் கடிதத்துடன் 2025 ஆகஸ்ட் 13ஆம் திகதிக்கு முன்னர் சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் சமூக அபிவிருத்தி பிரிவுக்கு அனுப்புதல் வேண்டும். (இங்கு கையொப்பத்துடன் மூலப்பிரதியினை வழங்குவது கட்டாயமானதாகும்)

சர்வதேச புகைத்தல் எதிர்ப்பு தினத்தினை அடையாளப்படுத்திக் கொண்டு கொடி மற்றும் ஸ்ரிக்கர்களை வழங்கச் செய்வதன் மூலம் கூடுதலான தொகையளவினை சேகரித்து சமுதாய அடிப்படை அமைப்பு, பிரதேச அமைப்பு மற்றும் அதற்கு பங்களிப்பினை வழங்கிய பிரிவுப் பொறுப்பு சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வலய உதவியாளர்கள், சமுதாய அடிப்படை அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமூக அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்கள், வங்கி முகாமையாளர்கள் மற்றும் வங்கிச்சங்க முகாமையாளர்கள் உட்பட கூடுதலான தொகையினை சேகரித்த சமுதாய அடிப்படை மற்றும் பிரதேச அமைப்புகளின் கௌரவ தலைவர்கள், கட்டுப்பாட்டுச் சபைகளின் தலைவர்களை பாராட்டும் வேலைத் திட்டம் ஒன்றும் திட்டமிடப்பட்டுள்ளது.

06. இந்த வேலை திட்டத்திலிருந்து ஒன்று திரட்டப்படுகின்ற நிதியங்கள் பிரதேச அமைப்புக்களின் கணக்குகளில் வரவு வைக்கப்படுவதனால் அத்தொகையிலிருந்து 90% பிரதேச மட்டத்தின் சமூக நலன்புரி வேலைத் திட்டங்களின் பொருட்டு செலவிட முடியும் என்பதுடன் (உரிய அமைப்புகளின் அங்கீகாரத்துடன்) நிலுவையான 10%த்தினை தேசிய சமூக அபிவிருத்தி நிதியத்திற்கு கட்டாயமாக அனுப்புதல் வேண்டும்.

இந்த வேலை திட்டத்தின் ஊடாக திரட்டப்படுகின்ற சகல நிதியங்களும் பிரதேச அமைப்புக்களின் கணக்குகளில் குறிப்பிட்ட தினத்தில் வரவு வைத்ததன் பின்னர் 2025.06.30-ம் திகதிக்கு முன்னர் கீழ் உள்ள படிவத்தினை பூர்த்தி செய்து ‘‘சமுர்த்தி தேசிய சமூக அபிவிருத்தி நிதியம்’’ என்ற பெயரில் உள்ள கணக்கிற்கு 10% பெறுமதியினையுடைய காசோலையினை 0080012772 என்ற கணக்கிலத்திற்கு சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் சமுதாய அடிப்படைப் பிரிவுக்கு பதிவுத் தபாலில் வழங்கும் பொறுப்பு சமுர்த்தி வங்கிச் சங்கத்தின் முகாமையாளர்களுக்கு ஒப்படைக்கப்படுகின்றது. அதன் பொருட்டு தேவையான சகல ஒத்துழைப்புக்களையும் சமூக அபிவிருத்தி உதவியாளர்களால் வழங்கப்படல் வேண்டும்.

## i. 2025 கொடி வேலைத்திட்டம்- பிரதேச அறிக்கை (10%)

பிரதேச அமைப்பின் பெயர்:-………………………………………………………………

பிரதேச அமைப்பு அதிகார பிரதேசத்திற்கு சொந்தமான சமுதாய அடிப்படை அமைப்புக்களின் எண்ணிக்கை:-
……………………

| சமுதாய அடிப்படை அமைப்பின் பெயர் | பதிவிலக்கம் | 2025.06.25 வங்கியிலிடப்பட்ட தொகை(ரூ) |
|---|---|---|
| | | |
| | | |
| மொத்தம் | | |

அதன் பிரகாரம் பிடிபணமாக உள்ள 90% தொகை =………………………………………………..

……………... என்ற இலக்கத்தினையுடைய காசோலை மூலம் அனுப்பப்பட்ட 10% தொகை …………………..

…………………………….…

சமுதாய அடிப்படை வங்கி முகாமையாளர்.

மேலுள்ள படிவத்தின் பிரகாரம் தகவல்களை சமுர்த்தி அலுவலகத்திற்கு வரவழைத்துக்கொள்ளும் பொறுப்புக்கள் மாவட்ட சமூக அபிவிருத்தி விடயப்பொறுப்பு முகாமையாளரைச் சார்ந்ததாகும். அது தொடர்பான கண்காணிப்பினை மாவட்ட சமுர்த்தி பணிப்பாளரால் மேற்கொள்ளப்படவேண்டியதுடன் கீழுள்ள படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்ட மாவட்ட் அறிக்கையினை 2025.06.30ம் திகதிக்கு முன்னர் தலைமைக் காரியாலயத்தின் சமூக அபிவிருத்திப் பிரிவிற்கும் பிரதியொன்றை சமுதாய அடிப்படை அமைப்பு மற்றும் விளையாட்டுப் பிரிவிற்கும் வழங்குதல் வேண்டும்.

## ii. 2025 தேசிய கொடி வேலைத்திட்டம்- மாவட்ட அறிக்கை (10%)

மாவட்டம்:-………….…………                                  பிரதேச அமைப்புக்களின் எண்ணிக்கை:-………...

| பிரதேச அமைப்பின் பெயர் | பதிவிலக்கம் | பிடிபணமாக உள்ள 90% தொகை(ரூபா) | தேசிய சமூக அபிவிருத்தி நிதியத்திற்கு அனுப்பப்பட்ட 10% தொகை(ரூபா) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| மொத்தம் | | | |

மேலுள்ள தகவல்கள் சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்.

………………………………………..                    ………………….……………….

சமுதாய அடிப்படை விடய முகாமையாளர்

பதவி முத்திரை                    சமூக அபிவிருத்தி விடய முகாமையாளர்

தொலைபேசி இலக்கம்:-……………………                    பதவி முத்திரை

மேலுள்ள தகவல்கள் சரியானது என உறுதிப்படுத்துகின்றேன்

………………………

07. 2025ஆம் ஆண்டின் மதிப்பீட்டுச் செயற்பாடுகளைத் தயாரிக்கும்போது சமுதாய அடிப்படை அமைப்பு மட்டத்தில் கொடிகளின் தேவைப்பாடுகள் பெற்றுக்கொள்ளப்படுவதால் மாவட்ட கொடி வருமானத்தினை சமுதாய அடிப்படை அமைப்புக்களின் எண்ணிக்கையினால் வகுத்து சராசரியின் அடிப்படையில் கூடுதலான வருமானத்தினை ஈட்டிய மாவட்டத்தினை தெரிவு செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

08. மாவட்ட அலுவலகங்களால் மேற்கொள்ளப்பட்ட கோரிக்கைக்கமைய தங்களுக்கு வழங்கப்படுகின்ற கொடி, ஸ்ரிக்கர்கள், உண்டியல்களின் லேபல்கள், சகலதையும் வேலைத்திட்டத்திற்காக பயன்படுத்திக் கொள்ளல் வேண்டும் என்பதுடன் (விசேடமாக கொடி) இதிலிருந்து எந்த ஒரு பொருளையும் திரும்ப தலைமைக் காரியாலயத்திற்கு ஒப்படைத்தலாகாது.

கொடிகளை அணிவிக்கச் செய்யும் நடவடிக்கைகளை பூர்த்தி செய்து குறிப்பிட்ட தினத்தில் ஒப்படைத்தன் பின்னர் திரும்பத் திரும்ப நிதியினை பொறுப்பேற்கலாகாது என்பதுடன் தங்களால் வருமான அறிக்கையினை முன்வைக்கும் போது திரும்பத்திரும்ப திருத்தங்களை மேற்கொள்ளலாகாது. அவ்வாறு மேற்கொண்டால் கணக்காய்வு விசாரணைகளுக்கு உள்ளாகியமை கடந்தாண்டில் ஏற்பட்டதனால் அதன் பொருட்டும் கூடிய கவனத்தினைச் செலுத்தி நடவடிக்கைகளை மெற்கொள்ளல் வேண்டும்

**விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளல்:-**

இச்சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் ஏதேனும் விளக்கங்களைப் பெற வேண்டியேற்படின் தாமதமின்றி சமூக அபிவிருத்திப் பொறுப்பு உதவிப் பணிப்பாளரை தொடர்பு கொள்ளவும்.

தொலைபேசி இலக்கம்- 011 2876601, 0711980287 - சமூக அபிவிருத்தி பிரிவு
மின்னஞ்சல் - Socialdev@samurdhi.gov.lk

சீ.டீ.களுஆரச்சி
பணிப்பாளர் தலைமையதிபதி

பிரதி:-
01.செயலாளர், கிராமிய அபிவிருத்தி, சமூக பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டுகை அமைச்சு - த.கூ.க.பொருட்டு
02.பிரதம கணக்காளர் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - அ.கொ.பொ/ உ.ந.பொருட்டும்
03.பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - அ.கொ.பொ
04.சகல பணிப்பாளர்கள் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - அ.கொ.பொ
05.தலைவர் தேசிய சமூக அபிவிருத்தி நிதியம் - அ.கொ.பொ/ உ.ந.பொருட்டும்
06.வங்கித் தொழிற்சமாச தலைவர் - அ.கொ.பொ/ உ.ந.பொருட்டும்

Translated by:-M.M.M.Jawhar(Translator)